**08.04.2026.**

**O.S.No.54/2015**

**பி.வா.சா. 3: ஜெயராமன்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>**:-**

1)இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது இந்த வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி புஷ்பம் இறந்துவிட்டதால் வாரிசு அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி அய்யம்பெருமாள் உயிருடன் தான் இருக்கிறார். அவர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவரை விசாரித்தால் வழக்கின் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) தனபாக்கியம் மற்றும் எனது தாயார் புஷ்பாவும் உடன் பிறந்த சகோதரிகள் இல்லை என்றால் சரிதான். எனக்கு வயது 57. நிருபண வாக்குமூலத்தில் 1ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 105/2, 106/9, 72/3, 75/8, 33/13, 48/9, 49/14, மற்றும் 55/10 இவை வாய்மொழியாக பிரித்து கொள்ளப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் அப்பா சொல்லித்தான் தெரியும். அவ்வாறு மேற்படி வாய்மொழி பாகம் என் அப்பா சொல்லித்தான் தெரியும் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாக பிரிவினை அடிப்படையில் அவரவர் பாகத்திற்கு தனிப்பட்டா பெற்றுவிட்டாரா இல்லையா என்ற விவரம் தெரியுமா என்றால் கூட்டு பட்டாவில் தான் உள்ளது. கூட்டு பட்டாவில் அவர் பெயர்களை ஏற்றுக்கொண்டார்கள். கூட்டு பட்டாவில் கோவிந்தான் பெயர் ஏற்றப்பட்டது சம்மந்தமாக வருவாய் துறை அதிகாரியிடம் ஆட்சேபனை மனு ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

3) நான் சொல்வது போல வாய்மொழி பாகம் தனிபட்டா பெற்று இருப்பார்கள் என்றும் அது கூட்டு குடும்ப சொத்தாக இருப்பதால்தான் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால் சரியல்ல. வாய்மொழி பாக பிரிவினை அடிப்படையில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் எந்த சர்வே எண்ணில் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

அசல் வழக்கு எண். 134/2004 என்ற வழக்கில் நானும் என் அப்பாவும் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கின் வழக்குரையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கின் வழக்குரையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்தால் இந்த வழக்கு எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் மேற்படி வழக்கில் வழக்குரையைதாக்கல் செய்யாமல் மறைத்து விட்டேன் என்றால் சரிதான். பிவாசாஆ.24 க்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4) 1957 ல் பெருமாளும், 1997 ல் முத்துசாமியும் இறந்துவிட்டார்கள் என்று சொல்வதற்கான ஆவணங்கள் வாதி தாக்கல் செய்து நிருபிக்கவில்லை என்று சொல்லியுள்ளது தவறு என்று சொல்வதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 20.07.2011 தேதிய உயிலில் கண்டுள்ள சொத்துக்கள் அணைத்திலும் பாதி பாகம் உரிமை உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நல்லுசாமி, பெரியசாமி, சின்னம்மாள், அவர்களுக்கும் பாத்தியப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மேற்படி நபர்களுக்கும் கூட்டு பாகம் உள்ளது என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்வதற்கு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

5) நான் சொல்வது போல மேற்படி நல்லுசாமி, பெரியசாமி, சின்னம்மாள் நபர்களுக்கும் கூட்டு பாகம் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி துரைசாமி உயிருடன் இருக்கும் போது சொத்துக்களை விற்பனை செய்து விட்டார் என்று சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி சொத்துக்கள் துரைசாமிக்கு கூட்டு பாகம் என்றும் பின்னிட்டு அவ்ரகள் விற்பனை செய்துவிட்டார் என்றும் முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ.25 வழக்கு பின்னிட்டு 10 வருடம் கழித்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். ஆவணம் தற்போது தான் கிடைத்தது. முதல் பதிலுரை

தாக்கல் செய்யும் போது மேற்படி ஆவணத்தை உடன் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ.25 தலைமை இடத்து துணை வட்டாட்சியரின் கையெழுத்து மட்டும் தான் உள்ளது என்றும் அதில் அரசாங்க கோபுர முத்திரை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். எனவே பிவாசாஆ.25 என்னால் தயார் செய்யப்பட்டது என்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) பிவாசாஆ.26 ஆவணங்களில் எங்கேயும் கிராம நிர்வாக அலுவலரின் முத்திரை இல்லை என்று சொன்னால் சரிதான். 1987, 1989, 1994, 2000, 2003 ஆவணங்கள் உண்மையான ஆவணங்களாக இருந்திருந்தால் அவை பதிலுரை தாக்கல் செய்யும்போதே போட்டு இருப்பேன் என்றும் அவை வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் தான் தற்போது வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று வழக்கு போட்ட பின்னிட்டு மேற்படி சொத்துக்கள் துரைசாமிக்கு உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று தனி வழக்கு உரிமை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கிலும் அந்த சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்கள் என்று கூறி எதிர் கோருரிமை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.04.08 17:48:25 +0530

**Subordinate Judge, Attur.**